முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 781**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

18.11.2021, வியாழக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
தானதர்ம சக்தி கொண்டு கலியுகத்தை
தனிப்பெரும் ஞான லோகமாக மாற்றவந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்கள் தந்து உந்தனுள் நித்தம்நித்தம்
வடிவேலன் யான் அற்புதம் நடத்தி வர
3. வருகின்ற அரங்கன் தவபலத்தின் சக்தி
வையகத்தார் உணர்ந்தால் போதும் அவரவர்க்கும்
அவரவர்க்கும் இனிதே ஜீவமுக்தி அழியாமை என்கின்ற பெரும்பேறு உறுதியாகும்
அவனியிலே அரங்கன் வாழ் பிரணவக்குடிலை அடையாளம் கண்டு உலகோர் வருக
4. வருகவே கலியுகத்தின் சிக்கலெல்லாம்
வையகத்தை விட்டோடி அமைதி காணும்
தருகின்ற அரங்கன் தர்மத்தாலே
தரணியோர்க்கு சர்வ பிணிகளும் அகன்றோடி
5. அகன்றோடி ஆரோக்கியம் பலம் கூடும்
ஆயுள் கீர்த்தி அதிவளம் காணும்
மிகைபட அரங்கனை தொடர்ந்து உலகோர்
மேலான தவசக்தி கூட்டி வர
6. வருகவே அரங்கன் தொண்டு மூலமும்
வையகத்தில் அரங்கன் தர்மத்தின் மூலமும்
பெருமைபட கலியுகம் மாற்றங்கண்டு
பிரணவ சக்தியால் ஞானயுகமாக அற்புதம் காணும்
7. காணவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
கலியுகத்தின் ஒப்பில்லாத ஞான யோகி
தானதர்ம சக்தியோடு இந்த தரணியில்
தவபலத்தையும் இணைத்து அற்புதம் நடத்துகின்ற
8. நடத்துகின்ற அரங்கனே எந்தன் அவதாரம்
நன்மை கருதி அரங்கன் வழி உலகோர் வர (இனி வருங்காலம் ஞான சித்தர் காலமாகும். ஆகவே முருகப்பெருமானின் அவதாரமான ஓங்காரக்குடிலாசானை பூசித்து ஓங்கார குடிலாசான் ஆசியைப் பெற்று வருகின்ற மக்களுக்கு ஞான சித்தர் கால ஆட்சியில் பங்கு பெற்று தொண்டாற்ற வாய்ப்பும் கிடைக்கும்)

இடர்களையெல்லாம் வென்று இந்த கலியுகத்தில்
இனிதே ஞான யுகம்படைத்து உலகோர் சிறப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—

ஓங்காரக்குடிலாசானுக்கு முருகப்பெருமான் வாசி நடத்தி கொடுத்து ஓங்காரக்குடிலாசான் தவம் மேற்கொள்ள இடம், பொருள், ஏவல் அனைத்தையும் அமைத்து கொடுத்தார் முருகப்பெருமானே ஓங்காரக்குடிலாசானாக அவதாரம் எடுத்து முருகப்பெருமானே தவபலமாகவும் தர்மபலமாகவும் இருந்து கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் செய்ய வாய்ப்பும் கொடுத்துள்ளார். தவ பலத்தையும் தர்ம பலத்தையும் பெற முருகப்பெருமானே அருள் செய்துள்ளார். முருகப்பெருமானின் ஆசியில்லாமல் தவபலத்தையும் தர்மபலத்தையும் பெறமுடியாது.

முருகப்பெருமானே ஓங்காரக்குடிலாசானுள் தங்கி இருப்பதால்தான் தடையில்லாமல் தொடர்ந்து அன்னதானம் என்ற அற்புத தொண்டை கடந்த 40 வருடங்களாக செய்துவர முடிகிறது. தவபலத்தின் சக்தியை ஓங்காரக்குடிலாசான் மூலம் அறிந்து கொண்ட மக்களுக்கு மரணமில்லா பெருவாழ்வும் கைகூடும். ஓங்காரக்குடிலாசானை முருகப்பெருமானாக பூசித்துவரும் மக்களுக்கு கலியுகத்தின் காமம் என்றகொடிய கோர பிடியினால் வரும் துன்பங்கள் விலகி, நோய் நொடிகள் அணுகாமல் ஆரோக்யம் பெருகி நீண்ட ஆயுளும் வாழ்க்கையில் நிம்மதியும் கைகூடும்.

ஓங்காரக்குடிலிற்கும் ஓங்காரக்குடிலாசானுக்கும் செய்கின்ற தொண்டே உலகிற்கு செய்யும் தொண்டாக மாறி முருகப்பெருமானின் அவதாரமான ஓங்காரக்குடிலாசான் ஆசி பெற்று ஞானயுகமாக மாற போகும் இந்த கலியுகத்தில் இருந்து விடுதலை பெற்று ஞானயுக ஆட்சியில் தொண்டாற்றவும் வாய்ப்பு கிடைக்கும். முருகப்பெருமான் ஆசியினால் ஓங்காரக்குடிலாசான் தாய் தந்தையினால் பெற்ற காம தேகத்தை நீர்த்து (நீக்கி) ஞான தேகமான ஒளிதேகம் பெற்றுள்ளார்.

இந்த வாய்ப்பினை பெறுவதற்கு தாயினும் கருணையுள்ள உலக ஞானத்தலைவன் முருக பெருமானின் ஆசியை பெறவேண்டும். பெற விரும்புகின்றவர்கள் உயிர்கொலை தவிர்த்து புலால் உணவினை மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொண்டு காலையிலும் மாலையிலும் சிறிது நேரம் **ஓம் சரவண ஜோதியே நமோ நம** என்றும் **ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி** என்றும் பூசித்து வரவேண்டும். இதுவரை புலால் உணவினை சாப்பிட்டு வந்திருந்தாலும் குற்றமில்லை. இனி புலால் உணவினை அறவே தவிர்த்து சுத்த சைவ உணவினை மேற்கொண்டு வந்தாலே போதும். மேலும் வாரம் குறைந்தபட்சம் ஒருவருக்கோ இருவருக்கோ அன்னதானம் செய்துவரவேண்டும்.

ஓங்காரக்குடில் என்ற பெருமை துறையூர் ஓங்காரக்குடிலையே சேரும்.